இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 212 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 29 – வியாழக்கிழமை 13 மார்ச் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 212: Thiruvalluvar Year - 2056 - Maasi 29 - Thursday 13 March 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2025) செங்கல்பட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 280 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 497 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், எஸ்.எஸ்.பாலாஜி, எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.அருண்ராஜ், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாசகார நாக்பூர் தேசியக் கல்விக் கொள்கையை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!

# தமிழ்நாட்டுக்காக போர்க்குணத்துடன் போராடுவோம்!

## செங்கல்பட்டில் - அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**செங்கல்பட்டு, மார்ச் 13-**

**“நாசகார நாக்பூர் தேசியக் கல்விக் கொள்கையை ஒருபோதும் ஏற்கமாட்டோம்; தமிழ்நாட்டுக்காக போர்க்குணத்துடன் போராடுவோம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டில் நடைபெற்ற அரசு விழாவில் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2025) செங்கல்பட்டில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

செங்கல்பட்டு மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நீர்நிலைகளும் ஏரிகளும் நிறைந்து நீர் நிலைகளில் செங்கழுநீர்ப் பூக்கள் அதிகமாக இருந்ததால் செங்கழுநீர்ப்பட்டு என்று அழைக்கப்பட்டு, இன்றைக்கு தலைநகர் சென்னையின் நுழைவாயிலாக இருக்கக் கூடியது. இந்த செங்கல்பட்டு! சிற்பக் கலையின் சிறப்பையும், தமிழ் கலைப் பெருமையையும் சொல்லும் மாமல்லபுரம் உள்ள மாவட்டம், இந்தச் செங்கல்பட்டு!

### இம்மாவட்டத்தில் கழக ஆட்சியில் எண்ணற்ற தொழிற் சாலைகள்!

அப்படிப்பட்ட இந்த மாவட்டம், தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்க, கழக ஆட்சிக் காலங்களில், மகேந்திரா, விப்ரோ, BMW, ப்ளெக்ட்ரானிக்ஸ், பாக்ஸ்கான், டெல், சாம்சங், இன்போசிஸ், டி.வி.எஸ். சீமென்ஸ், நிசான், ஃபோர்ட், அப்பலோ டயர்ஸ்,

➢ பல்லாவரத்தில் தமிழ்நாடு டாடா பார்மசூட்டிகல்ஸ் தொழிற்சாலை,

➢ மறைமலை நகரில் மெட்ராஸ் மேக்னெட்டிக் மீடியா லிமிடெட் தொழிற்சாலை

➢ 532 ஏக்கர் நிலத்தில் எம்.பி.பி.எல். புதுப்பிக்கப்பட்ட நிறுவனம்

➢ திருப்போரூரில், 500 ஏக்கர் பரப்பளவில் இயந்திரங்கள் மூலம் உப்பு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை,

➢ ஸ்ரீராம் ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை

➢ சிங்கப்பெருமாள்கோயில் அருகே மகேந்திரா நிறுவனத்தின் சார்பில் இயந்திர உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

இப்படி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான நுழைவு வாயிலாகவும் உருவாக்கியது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி!

இயற்கை வளம் கலைப் பெருமை

## செய்யூரில் 800 ஏக்கரில் சிப்காட் தொழில் பூங்கா!

தொழில் வளர்ச்சி என்று சிறந்து விளங்கும் இந்த செங்கல்பட்டு மாவட்டத்தில், இந்த அரசு விழாவை மிகப்பிரமாண்டமான வகையில் ஏற்பாடு செய்திருக்கின்ற பொறுப்பு அமைச்சர் நம்முடைய அருமைச் சகோதரர் தா.மோ. அன்பரசன் அவர்களை மனதார பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

### சிறுதொழில் வளர்ச்சியில் – அமைச்சர் தா.மோ.அன்பரசனுக்கு பெரும் பங்கு!

ஏராளமான சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை உருவாக்கி, தமிழ்நாட்டின் சிறுதொழில் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வரக்கூடியவர் நம்முடைய தா.மோ. அன்பரசன் அவர்கள்! முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாடு இருக்கிறது என்றால், அதில் இவருடைய பங்கும் இருக்கிறது! அவருடைய அமைதியான, அக்கறையான, உண்மையான உழைப்பின் மூலமாக, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது!

அதேபோல, தமிழ்நாட்டின் தொழில் துறையில், பெண்கள் அதிகமான அளவு பணியாற்றுவதற்கும் அவருடைய துறையின் பங்களிப்பு முக்கியப் பங்காற்றி வருகிறது! அத்தகைய அமைச்சர் அன்பரசன் அவர்கள். செங்கல்பட்டு மாவட்டத்தை வளர்ச்சி மிகுந்த மாவட்டமாக அவர் வளர்த்து வருகிறார். அவருக்கும், இந்த மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும், அதிகாரிகள், அலுவலர்கள் என அனைவருக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இன்றைக்கு இந்த விழாவிற்கு ஏராளமான பெண்கள், சகோதரிகள், தாய்மார்கள் வந்திருக்கிறீர்கள்... உங்களில் பல பேர் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இருப்பீர்கள். உங்களை எல்லாம் பார்க்கின்றபோது, வரலாற்றில் பதிவான ஒரு மாநாடுதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது!

### சட்டத்தின் மூலம் நனவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

1929ல் இதே செங்கல்பட்டில் நடந்த, சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடுதான் அது! பெண்கள் படிக்கவேண்டும்; வேலைக்குப் போகவேண்டும். அதற்காக இந்த மாநாட்டில், பெண்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் அழைப்பு விடுத்தார்! ஏராளமான பெண்கள் கலந்து கொண்டார்கள்! அந்த மாநாட்டில் தான், “பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமாக சொத்துரிமையும், வாரிசு பாத்தியத்தையும் கொடுக்கப்படவேண்டும்; “பெண்களும், ஆண்களைப் போலவே அனைத்து வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட வேண்டும்” “பள்ளி ஆசிரியர் வேலைகளுக்கு,


தொடர்ச்சி 2ஆம் பக்கம்


# நாடாளுமன்றத்தை அதிரவைத்த தமிழ்நாடு எம்.பி.க்கள்!

**புதுடெல்லி, மார்ச் 13-**

**ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சுக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி, காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம், திரிணாமூல் எம்.பி. கல்யாண் பானர்ஜி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்டம் நேற்று முன்தினம் தொடங்கிய நிலையில், மக்களவையில் பேசிய திமுக எம்பி சுமதி எனும் தமிழச்சி தங்கபாண்டியன், பிஎம் ஸ்ரீ திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட வேண்டிய ரூ. 2 ஆயிரம் கோடியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார்.

இதற்கு தர்மேந்திர பிரதான் பதில் அளித்துக் கொண்டிருந்தபோது, அவரது கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. எம்.பி.க்கள் அவையின் மையப் பகுதிக்கு வந்து கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து பதில் அளித்துக் கொண்டிருந்த தர்மேந்திர பிரதான், ஒரு கட்டத்தில் தி.மு.க. எம்.பி.,க்கள் நாகரிகமற்றவர்கள் என்றும் தமிழக மாணவர்களுக்கு அநீதி இழைப்பவர்கள் என்றும் கடுமையாக விமர்சித்தார்.

இதற்கு தி.மு.க. எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்துப் பேசிய தர்மேந்திர பிரதான், தனது குறிப்பிட்ட அந்த கருத்தை திரும்பப் பெற்றுக்கொள்வதாகக் கூறினார்.

இந்நிலையில், இரண்டாம் நாளான நேற்று முன்தினம் தி.மு.க. எம்.பி.க்கள், நாடாளுமன்ற வளாகத்தில் அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்விவகாரத்தில் திமுகவுக்கு காங்கிரஸ் கட்சியும் ஆதரவாக குரல் கொடுத்துள்ளது.

### ஒரு அமைச்சர் மக்களை அவமதிப்பதா?

நாடாளுமன்ற வளாகத்தில் பேசிய திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி. கல்யாண் பானர்ஜி, “தர்மேந்திர பிரதான் தனது கருத்துக்களுக்கான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும். அவர் பயன்படுத்திய மொழி எதிர்பாராதது. இது போன்ற மொழியைப் பயன்படுத்தியதன் மூலம் ஒரு மத்திய அமைச்சர், மாநில மக்களை அவமதித்துள்ளார். ஒன்று அவர் அவையில் மன்னிப்பு கேட்க வேண்டும், அல்லது அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். பிரதமர் மோடி தனது அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும். திரிணாமூல் காங்கிரஸ், தி.மு.க.வுக்கும் தமிழக மக்களுக்கும் ஆதரவாக நிற்கிறது.” என்று கூறினார்.

### அமைச்சர் மன்னிப்புக் கேட்க வேண்டும்!

இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் பேசிய காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம், “இரு மொழி பாடத்திட்டம் எங்களுக்கு மிகச் சிறப்பானதாக உள்ளது. இதில், தமிழ்நாடு தெளிவாக உள்ளது. எங்கள் மொழி அடையாளத்தைப் பாதுகாக்கிறது. மேலும், வணிகம் மற்றும் அறிவியல் உலகத்துடன் தொடர்பு கொள்ள ஆங்கிலம் எங்களுக்கு இணைப்பு மொழியாக உள்ளது. மூன்றாவது கட்டாய மொழி எங்களுக்குத் தேவையில்லை. தர்மேந்திர பிரதான் தனது கருத்தைத் திரும்பப் பெற்றுள்ளார். என்றாலும், அவர் மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும்” என்று கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மும்மொழிக் கொள்கையை திணிப்பதைக் கண்டித்து எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஒன்றிய அரசைக் கண்டித்து நேற்று முன்தினம் (11. 03.2025) தி.மு.க. எம்.பி.க்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற முகப்பில் போராட்டம் நடத்தினர். தமிழ்நாடு மாணவர்களின் உரிமையை பறிக்காதே எனப் பதாகைகளை ஏந்தியும், மும்மொழிக் கொள்கையை ஏற்கமாட்டோம் என கோஷங்களை எழுப்பியும் முழக்கமிட்டனர்.

### கனிமொழி கருணாநிதி ஆவேசப் பேட்டி!

தர்மேந்திர பிரதானின் பேச்சுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க.வினர் போராட்டம் நடத்திய நிலையில், இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி, “தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது. நாங்கள் மும்மொழிக் கொள்கையிலும், புதிய கல்விக் கொள்கையிலும் கையெழுத்திட வேண்டும் என்று கூறுகிறது. அவர்கள் தமிழ்நாட்டு குழந்தைகளின் எதிர்காலத்தை நாசமாக்குகிறார்கள். தமிழகக் குழந்தைகளுக்கு வர வேண்டிய நிதியை நிறுத்தி வைக்க அவர்களுக்கு உரிமை இல்லை. நேற்று, அவர் (தர்மேந்திர பிரதான்) மிகவும் மோசமான முறையில் பதிலளித்தார், நாங்கள் நேர்மையற்றவர்கள் என்றும், தமிழக மக்கள் நாகரிகமற்றவர்கள் என்றும் கூறினார். அவர் இவ்வாறு பேசுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இது முற்றிலும் ஜனநாயக விரோதமானது. அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்.” என்று கூறினார்.